# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI
## CC.No.5/2023

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | முத்துப்பாண்டி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சரவணன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.03.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் காரைக்குடியில் வசித்து வருகிறேன். கடந்த 28.04.2022 ம் தேதி மதியம் 1 மணிக்கு ஆண்டவர் செட்டுக்கு எதிரே உள்ள சந்தில் தேவகோட்டை போலீசார் மாதிரி வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். போட்டு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி பார்வை மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால், ஆமாம். போலீசார் என்னை மதியம் 1 மணி அளவில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும்போது நான் மட்டும்தான் இருந்தேன். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் காவல் நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை சம்பவ இடத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன். நான் போலீசார் கேட்டதற்கு இணங்க கையெழுத்து போட்டேன் என்றும் அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம் தெரியாது. அ.சா.1 எனக்கு பழக்கமானவரா என்றால் அவ்வாறு இல்லை அவரை தெரியாது. என்னிடம் போலீஸ் ஒருவர் கையெழுத்து வாங்கினார் அவர் பெயர் தெரியாது. ஆண்டவர் செட் இடத்தில் எப்போதும் மக்கள் நடமாட்டமாக இருக்கும் என்றால் அதிக கூட்டமாக இருக்காது மக்கள் நடமாட்டம் இருக்கும். மேற்படி பேப்பரில் நான் மட்டும்தான் கையெழுத்து போட்டேன் என்றும் வேறு யாரிடமும் கையெழுத்து வாங்கவில்லை என்றால் நான் போட்டு கொடுத்தேன் வேறு யாரிடமும் வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.5/2023**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | கலைச்செல்வன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | பாஸ்கரசேதுபதி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.03.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பணி ஓய்வு பெற்று மானாமதுரையில் வசித்து வருகிறேன். கடந்த 28.04.2022 ம் தேதி மதியம் 12 மணிக்கு தேகோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அ.சா.1 ஆரோக்கியசாமி கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண்.87/2022, இதச பிரிவு 379 ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சம்பவம் இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சாஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர்

பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை 28.04.2022 ம் தேதி 15.30 மணிக்கு ஆண்டவர் செட் அருகே கைது செய்து சமூகம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவு 379 ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அ.சா.1 ஆரோக்கியசாமி எத்தனை மணிக்கு காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தார் என்றால் மதியம் 12 மணி. எதிரியிடம் இருந்து பால் பாக்கெட் நேரடியாக கைப்பற்றப்படவில்லை என்றால், சரிதான். எதிரியை கைது செய்த இடத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையே 2 கிலோமீட்டர் தூரம் இருக்குமா என்றால் இல்லை சுமார் 500 மீட்டர்தான் இருக்கும். புகாரில் பால் பாக்கெட் ஒரு மாதமாக காணாமல் போய் வருவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு ஒரு மாத காலமாக பால் பாக்கெட் காணாமல் போனதற்கு வேறு எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகாரில் என்ன வகையான பால் பாக்கெட் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால், ஆவின் பால் பாக்கெட் 1 லிட்டர் பால் பாக்கெட் என்று சொல்லியுள்ளார். எதிரி இராஜராஜன் பொறியியல் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்த விபரம் தெரியுமா என்றால் இல்லை. எதிரி தனியாக பால் கடை நடத்தி வருவது தெரியுமா என்றால் ஆமாம் வீட்டிற்கு நேரடியாக விநியோகம் செய்து வருகிறார். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 5 வரையுள்ளவர்கள் அ.சா.1 ன் உறவினர்களா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த கடையில் இருந்த CCTV இயங்கவில்லை. குற்ற

இறுதி அறிக்கையில் CCTV இயங்கவில்லை என்ற தகவலை சொல்லியிருக்கிறீர்களா என்றால் சொல்லவில்லை. எதிரியை புகார்தாரர் சொல்லிதான் தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம் மனு கொடுக்கும்போதே இவர் மீது சந்தேகம் இருப்பதாக சொன்னார். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சம்பவ இடத்திற்கே செல்லாமல் அ.சா.1 கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.